(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 292.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2013 யூலை 25, வியாழக்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2588/ '12

1\.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியினுள் இலங்கைக்கு,

(i) வருடாந்தம் கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு உதவித் தொகைகள் வெவ்வேறாக யாது;

(ii) ஆகக் கூடுதலான இருதரப்பு உதவிகளை வழங்கும் பிரதானமான (10) பத்து நாடுகளும் யாவை;

(iii) இருதரப்பு உதவிகளை வழங்கியுள்ள மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நாடும் வழங்கிய பணத் தொகை வெவ்வேறாக யாது;

(iv) பல்தரப்பு உதவிகளை வழங்கிய நாடுகள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் யாவை;

(v) ஆகக்கூடுதலான பல்தரப்பு உதவிகளை வழங்கியுள்ள 10 நாடுகளும் அல்லது நிறுவனங்களும் வழங்கியுள்ள உதவிகளின் பெறுமதி வெவ்வேறாக யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இலங்கைக்கு வெளிநாட்டு உதவிகளை பெற்றுக்கொள்வதில் பின்பற்றப்படுகின்ற உபாய வழிமுறைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2894/ '12

2\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1950, 1960, 1970, 1980, 1990, 2000, 2005, 2006, 2007, 2008, 2009, 2010, 2011 மற்றும் 2012 ஆகிய நிதியாண்டுகளின் முடிவின் போதுள்ளவாறு,

(i) அரசாங்கத்தின் வருடாந்த வருமானம்;

(ii) அரசாங்கத்தின் வருடாந்த வருமானத்திற்கும் செலவிற்கும் இடையிலான ஒப்பீட்டு ரீதியிலான வித்தியாசம்;

(iii) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP);

(iv) (அ)(ii)இல் குறிப்பிடப்பட்டுள்ள வித்தியாசத்தினை, அந்த வருடத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகவும்;

(v) ஆளொருவருக்கான கடன்;

(vi) ஆளாருவருக்கான கடன் ஒப்பீட்டை ரூபாவிலும் ஐக்கிய அமெரிக்க டொலரிலும்

அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2920/ '12

3.

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள வலஸ்முல்ல மருத்துவமனையானது, சுற்றுக் கிராமங்கள் பலவற்றிலுள்ள நோயாளர்களுக்கு சுகாதார சேவைகளை வழங்கி வந்த மருத்துவமனை என்பதையும்;

(ii) இன்றளவில் குறித்த மருத்துவமனையில் மருத்துவர்களுக்கான பாரிய பற்றாக்குறை நிலவுகிறது என்பதையும்;

(iii) மருத்துவமனையில் இரத்த வங்கியின் நடவடிக்கைகள் பிரேத அறையில் பிரேதப் பரிசோதனை நடவடிக்கைகள் நடைபெறுவதில்லை என்பதையும்;

(iv) மேற்படி மருத்துவமனையின் எந்தவொரு வாட்டிலும் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்காக நோயாளிகள் அனுமதிக்கப்படுவதில்லை என்பதையும்;

(v) சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தை வலஸ்முல்ல நகரத்திலிருந்து அகற்ற திட்டமிடப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) வலஸ்முல்ல மருத்துவமனையில் நிலவும் மனித மற்றும் பௌதீக வளப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய துரிதமாக நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3072/ '12

4.

கௌரவ அஜித் பி. பெரேரா,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிழக்கு மாகாண சபை தாபிக்கப்பட்டு அதன் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) கிழக்கு மாகாண சபையினால் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள நியதிச்சட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நியதிச்சட்டத்தினதும் பெயர், இலக்கம் மற்றும் நிறைவேற்றப்பட்ட திகதி வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட,

(i) அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையின் Iஆவது நிரலின் (மாகாணசபை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையின் IIIஆவது நிரலின் (ஒருங்கியை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3266/ '12

5\.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஹோமாகம, பாதுக்க மற்றும் ஹன்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள ஒரு சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் கிராம உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படாத காரணத்தினால் அப் பிரதேசங்களின் மக்கள் பாரிய சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும்,

(i) தற்போது சேவையாற்றும் கிராம உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) வெற்றிடங்கள் நிலவும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்

வெவ்வேறாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3683/ '13

6\.

கௌரவ நிமல் விஜேசிங்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையான கால கட்டத்தினுள் அமுலாக்கப்பட்ட நிலைபேறான கமத்தொழில் நீர் முகாமைத்துவ கருத்திட்டத்தின் I, II கட்டங்களின் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நோக்கங்களை அடைவதற்காக இற்றைவரை எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) 2012 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட பயிர்ச் செய்கை கருத்திட்டங்களின் தற்போதைய நிலைமைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக இற்றைவரை மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் யாவை என்பதையும்;

(ii) இதற்கேற்ப எதிர்வரும் காலத்தில் மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3773/ '13

7\.

கௌரவ விஜித பேருகொட,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரையான காலப்பகுதியில் 'கமத்தொழில் உற்பத்திகளுக்கான பெறுமதி சேர்த்தல் மற்றும் வழங்கல் செயற்பாடுகளின் போது அறுவடைக்குப் பிந்திய சேதங்களைக் குறைப்பதன் மூலம் கமத்தொழில் உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தலை மேம்படுத்தல்' எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் யாதென்பதையும்;

(ii) இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ள கடமைப் பொறுப்புகள் யாவை என்பதையும்;

(iii) மக்களுக்கு இதன் மூலம் கிடைத்துள்ள நிவாரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்தின் பொருட்டு தேசிய பல்கலைக்கழகங்களிலிருந்து பெறப்பட்டுள்ள சேவைகளும் பங்களிப்புகளும் யாவை என்பதையும்;

(ii) S.2KR 2010-2012 நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் கருதப்படுவது யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3871/ '13

8.

கௌரவ செஹான் சேமசிங்ஹ,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் இன்று வரையான காலப் பகுதியினுள்,

(i) கரையோர வள முகாமைத்துவக் கருத்திட்டத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) 'டீ கொம்' நிறுவனத்தின் செயற்பாடு யாது என்பதையும்;

(iii) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் ஆற்றப்பட்ட மக்கள் சேவைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி மூன்று நிறுவனங்களினதும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் யாவை என்பதை தனித்தனியே அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2589/ '12

9.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் மிகத் தனவந்தர்களில் 20% அனுபவிக்கும் தேசிய வருமானத்தின் பெறுமதி;

(ii) இலங்கையின் மிக வறியவர்களில் 20% அனுபவிக்கும் தேசிய வருமானத்தின் பெறுமதி

யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே (அ) i மற்றும் ii இற்கான விடைகளுக்கமைய, தேசிய வருமானப் பகிர்வில் முரண்பாடு காணப்படுமாயின், இதனை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர், இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2895/ '12

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப் பட்டவாறு 2002 - 2003 இல் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வரி விலக்கின் பெறுமதியானது இலங்கை ரூபாய் 1000 பில்லியன் அளவிற்கு பெரும் தொகையாக இருந்ததா என்பதையும்;

(ii) இல்லையெனில், அதன் உண்மையான பெறுமதி யாதென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட வரி மன்னிப்பு 2004 - 2005 இல் விலக்கிக் கொள்ளப்பட்டதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) ஐக்கிய தேசியக் கட்சியினால் வழங்கப்பட்ட வரி மன்னிப்பு பிழையானதும் சட்டவிரோதமானதும் ஆகும் என்பதை 2004 இல் இருந்த அரசாங்கம் நிரூபித்துள்ளதா என்பதையும்;

(ii) குறிப்பிட்ட வரிவிலக்கு விலக்கிக்கொள்ளப்பட்டதன் பின்னர் இற்றைவரை அறவிடப்பட்ட வரியின் பெறுமதியை வருடாந்த அடிப்படையிலும்;

(iii) அவ்வித குறைந்த பெறுமதியான வரிகளை அறவிட்டமைக்கான காரணத்தையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) ஐக்கிய தேசியக் கட்சியினால் அறிமுகப்படுத்தப்பட்ட வரி மன்னிப்புகளை எதிர்மறையான விமர்சனங்களை முன்வைத்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் 2004 இற்கு பின்னர் ஏதவாது வரி மன்னிப்புகளை முன்வைத்ததா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் வழங்கப்பட்ட வரி மன்னிப்புகளின் பெறுமதியையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2921/ '12

11.

கௌரவ புத்திக பதிரண,— இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திக்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவின், கோட்டேகொட, பெலிதெனிய பிரதேசத்தில் அமைந்துள்ள தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைக்குச் சொந்தமான கட்டடம் எவ்வித அறவீடுமின்றி தேசிய பயிலுனர் சபைக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) தேசிய பயிலுனர் சபையினால் 2011 ஆம் ஆண்டு யூன் 25 ஆம் திகதியன்று அக்கட்டடத்தில் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிலையத்தில் பாடநெறிகளை ஆரம்பிக்கும் பொருட்டு இடம்பெற்ற அங்குரார்ப்பண விழாவுக்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பயிற்சி நிலையம், அது ஆரம்பிக்கப்பட்ட தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைக்கு சொந்தமான கட்டடத்திலிருந்து அகற்றப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) தற்போது மேற்படி பயிற்சி நிலையம் நடாத்தப்படும் புதிய இடம் யாதென்பதையும்;

(iv) அக்கட்டடத்திற்காக செலுத்தப்படுகின்ற மாதாந்த வாடகைத் தொகை எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி கட்டடத்தின் உரிமையாளரின் பெயரும் முகவரியும் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3684/ '13

12.

கௌரவ நிமல் விஜேசிங்க,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வ/ப சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் கீழ் நிர்வகிக்கப்படும் தோட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தோட்டத்தினதும் காணியின் பரப்பளவு மற்றும் மேற்கொள்ளப்படும் முக்கிய பயிர்ச் செய்கைகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) கடந்த 10 வருடத்தினுள் ஒவ்வொரு தோட்டத்திலிருந்தும் கிடைத்த வருமானம் மற்றும் இலாபம் அல்லது நட்டம் தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

3775/13

13.

கௌரவ விஜித பேருகொட,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அவசரகால சட்டத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அவ்வாறு இணைப்பதற்கு ஏதுவான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறு இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டு மாகாணங்களாக மீண்டும் பிரகடனப்படுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி மாகாணங்களை பிரித்தலானது, உயர்நீதிமன்ற வழங்குத் தீர்ப்பொன்றுக்கு பின்னர் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(v) இன்றேல், அவ்வாறான வழங்குத் தீர்ப்பொன்று வழங்கப்படுவதற்கு முன்னதாக அவ்வாறு மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

கௌரவ நெரஞ்சன் விக்கிரமசிங்க,— சட்டமூலத்தை மீளப் பெறுவதற்கான அனுமதி,— இன்றைய தின ஒழுங்குப் பத்திரத்தில் 18 ஆம் விடயமாகக் காணப்படுகின்ற பின்வரும் சட்டமூலத்தை மீளப்பெறுவதற்கான அனுமதி வழங்கப்படுமாக :—

"அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் வருமானத்தின் மீது வரிகொடாது தட்டிக்கழிப்பதைத் தடுப்பதற்குமாக, 2013 சனவரி 22 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இந்தியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே செய்துகொள்ளப்பட்டதும், 2013.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97(1)(அ) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2012 திசெம்பர் 08 ஆம் திகதிய 1787/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 பெப்புருவரி 08 ஆம் திகதிய 1796/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் முத்திரை வரி தொடர்பில் சனாதிபதியினால் விதிக்கப்பட்டு, 2013 மே மாதம் 10 ஆந் திகதிய 1809/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.07.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 22(1) ஆம் பிரிவின் கீழ் மதுவரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2013 ஏப்பிறல் மாதம் 03 ஆம் திகதிய 1804/16 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.07.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இல. 957)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 மே 03 ஆம் திகதிய 1808/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.4),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 யூன் 07 ஆம் திகதிய 1813/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 10ஆம் பிரிவின் கீழான இறக்குமதித் தீர்வைகள் சம்பந்தமான, 2012.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2013 யூன் மாதம் 20 ஆம் திகதிய 1815/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 10.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடனும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 மாச்சு 01 ஆம் திகதிய 1799/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 16.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

17.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

18.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

19.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

20.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

21.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

22.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனத்தைக் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.